பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 08 | வியாழக்கிழமை | 20.02.2025 | அதிர்வு 202

## எஸ்.பி. சாமி காலமானார்!



பிரபல தொழிலதிபரும் “தினக்குரல்“ பத்திரிகையின் ஸ்தாபகருமான எஸ்.பி. சாமி தனது 89 ஆவது வயதில் 06





### புதுக்கடை நீதிமன்றத்துக்குள் ‘கனேமுல்ல சஞ்சீவ’ சுட்டுக்கொலை:

# சட்டத்தரணி வேடத்தில் வந்தவர் முன்னாள் இராணுவச் சிப்பாய்!

## வானில் தப்பிச் சென்றபோது புத்தளத்தில் கைது





**கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் வைத்து பாதாள உலகக் கும்பலின் முக்கிய புள்ளியான ‘கனேமுல்ல சஞ்சீவ’ என்று அழைக்கப்படும் சஞ்சீவ குமார சமர ரத்னவைத் கைத்துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் புத்தளம் பிரதேசத்தில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

**நேற்றுக் காலை சட்டத்தரணி வேடத்தில் கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குச் சென்ற துப்பாக்கிதாரி ஒருவரால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.** 06










நேற்று இலங்கை முழுவதும் அதிகம் பேசப்பட்ட விவகாரம் கொழும்பு ஹல்ஸ்டோர்ப் நீதிமன்ற வளாகத்தில் நீதிமன்றத்துக்குள் சாட்சியமளித்துக் கொண்டிருந்த பாதாள உலகக் குழு நபர் கணேமுல்ல சஞ்சீவ அங்கு வைத்துச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட விடயம்தான்.

அந்தச் சம்பவம் தொடர்பான விவரங்கள், செய்திகள், தகவல்கள் – அந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்திய சூத்திரதாரரி கைது செய்யப்பட்டமை வரை – பல ஊடகங்களில், குறிப்பாக சமூக ஊடகங்களில், வேகமாக செய்திகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

அவற்றுக்கு அப்பால் இரண்டு விடயங்களை இந்த விவகாரத்தை ஒட்டிச் சுட்டிக்காட்டலாம் என்று நினைக்கிறேன்.

சுட்டுக் கொல்லப்பட்ட கணேமுல்ல சஞ்சீவ ஏற்கனவே 19 கொலை வழக்குகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களோடு தொடர்புடைய பாதாள உலகக் குழு உறுப்பினர் என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன. 06

# தமிழ்க் கூட்டமைப்பை நாம் பிரிக்கவில்லை!

## வடமராட்சியில் சுமந்திரன் விளக்கம்




(எஸ்.ரகுதீஸ்)

"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளே இருக்கின்ற கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டு, பின்னர் ஒன்றாக ஆட்சியமைப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவு சரியான விதத்தில் புரிந்துகொள்ளப்படாமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாங்கள் பிரித்துவிட்டோம் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சின் பதில் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உடுப்பிட்டித் தொகுதியின் உள்ளூராட்சி வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் ஆலோசனைக் கூட்டம் மந்திகை மடத்தடியில் அமைந்துள்ள வடமராட்சி தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக தொகுதி அடிப்படையிலான கலந்துரையாடல்கள் தற்போது நடந்துகொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தை பொறுத்தவரையில் 17 சபைகள் உள்ளன. இந்தச் சபைகள் அமைந்துள்ள வெவ்வேறு தொகுதிகளில் கலந்துரையாடி, அதன்பின்னர் மாவட்டக் கிளையில் இது குறித்து பேசி சில முடிவுகளை எடுக்க வேண்டிய தேவையுள்ளது.

கடந்த வாரத்தில் மாவட்டக் கிளையில் தீர்மானம் எடுத்தோம். அதன்படி ஒவ்வெரு தொகுதிகளிலும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

அதன்படி, உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த எமது கட்சி கிளையுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறுகின்றது. இந்தத் தொகுதியில் இரண்டு சபைகள் உள்ளன. கரவெட்டி பிரதேச சபையும், வல்வெட்டித்துறை நகர சபையும் உள்ளன.

ஆகவே, இந்த இரண்டு சபைகளிலும் நாங்கள் போட்டியிடுகின்ற முறைமை குறித்து, எமது உறுப்பினர்களுடன் கலந்துரையாடவுள்ளோம்.

எமது கட்சி தனித்துப் போட்டியிடுவது என்ற முடிவை சென்ற தடவை தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாகவே நாங்கள் எடுத்திருந்தோம்.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளே இருக்கின்ற கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டு, பின்னர் ஒன்றாக ஆட்சியமைப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவு சரியான விதத்தில் புரிந்துகொள்ளப்படாமல், நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரித்துவிட்டோம் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால், இந்தத் தேர்தல் முறைமையைக் கருத்தில் கொண்டு தனியாக ஒரு கட்சி ஆட்சியமைப்பது மிகவும் கஷ்டமான விடயம் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே, இப்போது, நாங்கள் சிபாரிசு செய்த அந்த முறை சிறந்தது என்ற எண்ணம் ஏனைய கட்சித் தலைவர்கள் மத்தியிலும் காணப்படுகின்றது. ஆகவே, அவர்களிடமும் நாங்கள் இது குறித்து பேசியிருக்கின்றோம்.

வெவ்வேறு இடங்களில் சில வேளைகளில் சற்று வித்தியாசமான அணுகுமுறைகளை நாங்கள் கையாள வேண்டியுள்ளதாக இருக்கின்றது. இந்தத் தேர்தல் முறைமையை எப்படியாக எங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது என்பது குறித்து ஒவ்வொரு சபையாக நாங்கள் ஆராய வேண்டிய தேவை இருக்கின்றது." – என்றார்.

# அடுத்த மாதத்தின் பின்னர் டிஜிட்டல் அடையாள அட்டை

டிஜிட்டல் அடையாள அட்டையை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் பின்னர் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென டிஜிட்டல் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான தரவுகளை பெற்றுக்கொள்ளும் முறைமைகளை தயாரிக்கும் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்தார்.

பிரதேச செயலகங்களின் செயற்பாடுகள் ஊடாக தரவுகளை வழங்குவதற்காக பொதுமக்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக இணையம் மூலமான திட்டமொன்றும் தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளதாக டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன குறிப்பிட்டார்.

முதலாம் கட்டத்தின் கீழ் டிஜிட்டல் அடையாள அட்டைக்காக விண்ணப்பிப்போரின் நிழற்படம் மற்றும் கைவிரல் அடையாளங்களை பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டத்தின் கீழ் கண்விழிகளின் அடையா



எத்தை டீஜமுஆநுவுசுஜஊ டிஜிட்டல் அடையாள அட்டையில் உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

புதிதாக அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள விண்ணப்பிப்போருக்கு முதலாம் கட்டத்தின் கீழ் டிஜிட்டல் அடையாள அட்டையை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பழைய அடையாள அட்டைகளுக்கான டிஜிட்டல் அடையாள அட்டைகளையும் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.







# வத்திராயனில் மூவர் மீது கல், கம்பிகளால் தாக்குதல்

## வாளால் வெட்டவும் முயற்சி

யாழ். வடமராட்சி கிழக்கு, வத்திராயன் பகுதியில் நேற்று புதன்கிழமை மாலை மூவர் மீது கொடூரமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குடும்பத் தகராறின் காரணமாக வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நபர் ஒருவர் தனது தந்தை மீதும், சகோதரன் மீதும், சகோதரனின் மகன் மீதும் வவுனியா பகுதியில் இருந்து வாகனத்தில் ஆட்களை அழைத்து வந்து வீட்டுக்குள் புகுந்து கம்பி, கற்களால் தாக்குதல் நடத்தியுள்ளார் என்று தெரியவருகின்றது.

வாகனத்தில் வருகை தந்து தாக்குதல் நடத்திய கும்பல் வாகனத்துக்குள் வாள்களை மறைத்து வைத்திருந்தனர் என்று கூறப்படுகின்றது.

மேற்படி தாக்குதலில் படுகாயமடைந்த மூவரும் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக இருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா கலீல் நாட்டிற்கு வருகை

மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா கலீல் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

அமைச்சர் உள்ளிட்ட தூதுக்குழுவினர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை நேற்று காலை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா கலீல் உள்ளிட்ட தூதுக்குழுவினர் நாளை வரை நாட்டில் தங்கியிருப்பார்கள் என வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



# உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் தொடர்பான வர்த்தமானி வெளியீடு

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஒரு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இது 274 உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரப்பூர்வ பதவிக்காலம் ஆரம்பமாகும் திகதியைக் குறிக்கிறது.

அதன்படி, அந்த 274 நிறுவனங்களின் அதிகாரப்பூர்வ பதவிக்காலம் இந்த வருடம் ஜூன் 2 ஆம் திகதி ஆரம்பமாகும் என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் 274 பிரதேச சபைகள், 27 மாநகர சபைகள் மற்றும் 36 நகர சபைகள் உட்பட மொத்தம் 337 நிறுவனங்களுக்குப் பொருந்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# 24 மணிநேரமும் சேவையில் ஈடுபடும் குடிவரவு - குடியகல்வு திணைக்களம்




குடிவரவு - குடியகல்வு திணைக்கள பிரதான அலுவலகத்தை 24 மணித்தியாலங்களும் திறந்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு தெரிவிக்கின்றது.

இந்த நடவடிக்கை நேற்று முன்தினம் முதல் எடுக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் 4000 கடவுச்சீட்டுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை முதல் பத்தரமுல்லை வரையில் இலங்கை போக்குவரத்து சபையின் இரவுநேர பஸ் சேவை நேற்று முதல் முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டுக்கான அவசர தேவை கொண்டவர்கள் மாத்திரம் அலுவலகத்திற்கு வருகைதந்து அவற்றை பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது போதுமான கடவுச்சீட்டுகள் கையிருப்பில் உள்ளதால் வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படாதென அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் குடிவரவு - குடியகல்வு திணைக்கள அலுவலகத்தை புதிதாக திறப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் தெரிவித்துள்ளார்.

# 5 மாகாணங்களில் வெப்பம் போதியளவு நீர் அருந்துங்கள்



வெப்பமான வானிலை தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

நாட்டின் 5 மாகாணங்களிலும் சில பிரதேசங்களிலும் வெப்ப குறியீடு மனித உடலுக்கு உணரும் வெப்பம் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்து காணப்படும் என திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு, வட மத்திய, வடமேல், தென் மாகாணங்களிலும் இரத்தினபுரி, மொனராகலை மாவட்டங்களிலும் வெப்ப நிலை அதிகரிக்குமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே, போதியளவு நீர் அருந்துமாறும் முடிந்தளவு நிழலில் இளைப்பாறுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

நிலவும் வெப்பமான வானிலையால் நீர் விநியோகத்தில் தடங்கல் தொடர்பில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிக்கை விடுத்துள்ளது.

நீர்நிலைகளில் நீர்மட்டம் சடுதியாக குறைந்து வருவதாகவும் அதிக வெப்பத்தினால் மக்களின் நீர் பயன்பாடு அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குடிநீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் அனைவரின் அத்தியாவசிய குடிநீர், சுகாதாரத் தேவைகளுக்கு சமமான முறையில் நீர் விநியோகிக்கப்பட வேண்டும் எனவும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

வாகனங்களை கழுவுதல், வீட்டுத் தோட்டம் உள்ளிட்ட செயற்பாடுகளுக்காக நீரைப் பயன்படுத்துவதை குறைத்து நாளாந்த தேவைகளுக்காக மாத்திரம் நீரைப் பயன்படுத்துமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# தேசிய பாதுகாப்புக்குப் பாரிய அச்சுறுத்தல்! நீதிமன்றத்தில் கூடப் பாதுகாப்பு இல்லை!!

## நாடாளுமன்றில் தயாசிறி எம்.பி. விசனம்



"கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் சட்டத்தரணி வேடம் தரித்து துப்பாக்கிதாரி சாட்சிக்கூண்டில் இருந்த சந்தேகநபர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார். நீதிமன்றத்தில் நீதிபதிகளினதும், சட்டத்தரணிகளினதும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை. இது பாரதூரமானது. இந்த விடயம் குறித்து அரசு விசேட கவனம் செலுத்த வேண்டும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

"கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிதாரி ஒருவர் சட்டத்தரணியைப் போன்று வேடம் தரித்து நீதிபதிகள் முன்னிலையில் சாட்சிக் கூண்டில் இருந்த சந்தேகநபர் மீது துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுள்ளார். இது பாரதூரமானதொரு பிரச்சினையாகும்.

அதேவேளை, காலியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியுள்ளது.

நீதிமன்றத்தில் கூட துப்பாக்கிச்சூடு நடத்தப்படுவதால் நீதிபதிகள் எவ்வாறு சுதந்திரமாகச் செயற்பட முடியும்? இதனை அலட்சியப்படுத்த முடியாது.


இவ்வாறான செயற்பாடுகளினால் நீதிமன்றத்தில் நீதிபதிகளினதும், சட்டத்தரணிகளினதும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை.

பதில் பொலிஸ்மா அதிபர் தொடர்பில் ஜனாதிபதி சிறந்த முறையில் பேசுகின்றார். ஆனால், கடந்த ஓரிரு மாதங்களில் மாத்திரம் 78 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

படுகொலைகள் குறித்து அரசு கடுமையான முறையில் அவதானம் செலுத்த வேண்டும். இல்லாவிடின் இது எங்கு செல்லும் என்பது எமக்குத் தெரியாது." – என்றார்.

# பாதுகாப்புத் தரப்பில் உள்ள சிலர் பாதாளக் குழுக்களுடன் தொடர்பு!

## சபையில் ஆளும் தரப்பு தெரிவிப்பு



"பாதாள உலகக் குழுக்களில் ஈடுபடும் அல்லது ஒழுங்கமைக்கும் தரப்பில் பலர் இலங்கையில் இல்லை. பாதுகாப்புத் தரப்பின் ஒருசில அதிகாரிகள் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள்."

– இவ்வாறு ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமர்வின்போது கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் எதிரணியின் உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் குறித்து அரசு விசேட அவதானம் செலுத்தியுள்ளது. பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பாதாள உலகக் குழுக்கள் பணம் தூயதாக்கல், போதைப்பொருள் வியாபாரம், பல சட்டவிரோத செயற்பாடுகளுடன் தொடர்புடையவை.

பாதாள உலகக் குழுக்களில் ஈடுபடும் அல்லது ஒழுங்கமைக்கும் தரப்பில் பலர் இலங்கையில் இல்லை. விசாரணைகளை முன்னெடுத்துச் செல்கையில் பாதுகாப்புத் தரப்பின் ஒருசில அதிகாரிகள் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பு கொண்டுள்ளமை வெளிப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படை, பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவுகளைக் கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, பாதாள உலகக் குழுக்கள் குறித்து அரசு விசேட அவதானம் செலுத்தியுள்ளது. அனுமதிப் பத்திரமளிக்கப்பட்ட துப்பாக்கிகளை மீண்டும் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தியா, டுபாய் ஆகிய நாடுகளில் தலைமறைவாகியுள்ள பாதாள உலகக் குழுவினரை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. விசாரணைகள் அனைத்தையும் நாடாளுமன்றத்தில் குறிப்பிட முடியாது. பாதாள உலகக் குழுக்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்கும் அப்பால் ஒரு விடயம் உண்டு.

2018 – 19 ஆம் ஆண்டுகளில் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை கொழும்பில் வைத்துக் கொல்வதற்காக ஒரு கூலிப்படை பெருந்தொகை பணம் கொடுத்து ஒழுங்குபடுத்தப்பட்டதாக ஒரு விவகாரம் அம்பலமானது. அதை ஒட்டி பாதாள உலகக் குழுவினர் பத்துக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு, நீண்ட காலம் சிறையில் இருந்தனர். அந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட பிரதான சூத்திரதாரிகளில் ஒருவர் நேற்று சுட்டு கொல்லப்பட்ட கணேமுல்ல சஞ்சீவ என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன. அதாவது சுமந்திரனைக் கொழும்பில் வைத்துக் கொல்லும் பொறுப்பை 'கொண்ட்ராக்ட்' எடுத்த பிரதான சூத்திரதாரியே நேற்று சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்.

சுமந்திரனை கொல்வதற்கான சதித்திட்டம் பற்றிய விடயங்கள் முழு அளவில் விசாரிக்கப்பட்டும், அந்தச் சதி நிரூபிக்கப்படாத நிலையில் அந்த அந்த வழக்கும் இழுபட்டு நீடிப்பது குறிப்பிடத்தக்கது. அதனால் சுமந்திரனைக் கொல்ல வெளிநாட்டிலிருந்தபடி கூலிப்பட்டாளத்துக்கு பெரும் தொகையை வாரி இறைத்த தரப்பு இன்னும் அம்பலமாகவில்லை என்றும் கூறப்பட்டது.

இந்த விடயத்தில் அடுத்துச் சுட்டிக்காட்டப்பட வேண்டிய அம்சம் இன்னும் முக்கியமானது.

அண்மையில் மன்னாரில் நீதிமன்ற வளாகத்துக்கு முன்னால் வைத்து மேற்கொள்ளப்பட்டதுப்பாக்கிச்சூட்டில், கொலை வழக்கு ஒன்றுடன் தொடர்புடைய இரண்டு முக்கிய நபர்கள் உயிரிழந்தனர். அந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாகவும் கைது செய்யப்பட்ட பிரதான கொலையாளிகள் முன்னாள் இராணுவத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. நேற்று நீதிமன்றத்துக்குள் கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்ட விடயத்திலும் பிரதான சூத்திரதாரி முன்னாள் இராணுவக் கொமாண்டோ படையைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது.

முன்னாள் இராணுவப் படையினரின் கைவரிசை பெரும் குற்றவியல் விவகாரமாக தெற்கில் உருவாகி வருகிறது.

இதே சமயம் இலங்கையில் பாதாள உலக குழுவோடு தொடர்புடைய இரண்டு பிரதான சந்தேக நபர்கள் இந்தியாவில் கைதாகி, சென்னையில் இருந்து நேற்று மதியம் விமானத்தில் கொழும்புக்குக் கூட்டி வரப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் குற்ற ப்புலனாய்வு பிரிவில் (சி.ஐ.டியில்) அண்மை காலம் வரை பணியாற்றியவர் என்று கூறப்படுகின்றது.

ஆக, பாதுகாப்புத் தரப்பில் இருந்தவர்களினால் தெற்கில் பெரும் கிரிமினல் குற்றங்கள், படுகொலைகள், போதைவஸ்துக் கடத்தல் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன என்ற விடயம் நன்கு அம்பலமாகி வருகிறது.

இலங்கையில் இப்போது ஆட்சிக்கும் மக்களுக்கும் எதிராகப் பெரும் பாதாள உலகக் குழுவின் வன்முறை மோசமாக உருவெடுத்து வருகின்றது. அதற்கு எதிராக ஒரு யுத்தத்தைப் பிரகடனப்படுத்தி, அதனை அடியோடு அழிக்கச் செய்ய வேண்டிய அரசாங்கம், 16 ஆண்டுகளுக்கு முன்னர் யுத்தம் முடிவடைந்த வடக்குக் கிழக்கில் தன்னுடைய முழு படைகளையும் நிறுத்தி, ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு, தெற்கில் நடக்கும் அட்டூழியங்களை அடக்க வழியற்ற கையாலாகாத்தனத்தில் அடங்கிப் போய் கிடக்கின்றது.

தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்க வேண்டும் என்று கருதும் பௌத்த – சிங்களப் பேரினவாத மேலாண்மை திமிர், தன்னுடைய பிரதேசத்தில் கட்டு மட்டில்லாமல் செயற்படும் பாதாள உலகக் குழுக்களின் அட்டூழியம் குறித்து கவனிக்காமல் பார்த்திருக்க வழி செய்திருக்கின்றது.

தெற்கில் பாதாள உலகக் குழுக்களின் அட்டூழியம் இந்தளவு தூரம் எல்லை மீறி, கணக்கெடுக்க முடியாத சமூகக் குற்றமாகப் பேயுருக் கொண்டிருக்கின்ற போது, அதை அடக்குவதற்கு தன் படைகளை ஏவாமல், தமிழர் தேசத்தை ஆக்கிரமித்து வைக்கத் தன் படைகளை பயன்படுத்துகின்றது முட்டாள் ஆட்சித் தலைமை...!

---

## எஸ்.பி.சாமி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலமானார்.

சமூக மற்றும் சமயப் பணிகளில் எஸ்.பி. சாமி ஈடுபாடுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வயது மூப்பின் காரணமாக நேற்று இரவு அவர் காலமானார் என்று குடும்பத்தினர் தெரிவித்தனர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் குடும்பத்தினர் மேலும் குறிப்பிட்டனர்.

## சட்டத்தரணி வேடத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பிரதான சந்தேகநபர் வான் ஒன்றில் தப்பிச் சென்ற நிலையில் புத்தளம் – பாலாவி பகுதியில் வைத்து நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

34 வயதுடைய மொஹமட் அஸ்லம் செரீப்டீன் எனப்படும் முன்னாள் கொமாண்டோ படைச் சிப்பாயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேகநபர் ஏற்கனவே 5 கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின்போது பிரதான சந்தேகநபருக்குப் பெண் ஒருவர் உதவி புரிந்தமை சி.சி.ரி.வி. காணொளியில் புலப்பட்டுள்ளது. அந்தப் பெண்ணும் சட்டத்தரணி போல் ஆடை அணிந்து கைத்துப்பாக்கியைச் சட்டத்தரணிகள் பயன்படுத்தும் சட்டப்புத்தகத்தில் மறைத்துக்கொண்டு வந்து பிரதான சந்தேகநபரிடம் நீதிமன்றத்துக்குள் வைத்து வழங்கியுள்ளார். அந்தப் பெண்ணைக் கைது செய்வதற்கும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேகநபர் பல பெயர்களில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளார். இவர் கைது செய்யப்படும்போது பல ஆள் அடையாள அட்டைகளை வைத்திருந்துள்ளார். சட்டத்தரணி என்று தன்மை அடையாளப்படுத்தச் சட்டத்தரணிகளுக்கான அடையாள அட்டையையும் அவர் வைத்திருந்துள்ளார்.

அந்தவகையில் மேற்படி பிரதான சந்தேகநபர் மொஹம்மட் அஸ்லம் செரீப்டீன் என்ற பெயரிலும், பின்னர் சமிந்து டில்சான் பியூமங்க கந்தனாராச்சி என்ற பெயரிலும் ஆள் அடையாள அட்டைகளை வைத்திருந்துள்ளார்.

சட்டத்தரணிகளுக்கான அடையாள அட்டையில் கொடிகாரகே சுசுன் பிரபாத் நிஷங்க என்ற பெயரில் காணப்படுகின்றார்.



# தேசிய பாதுகாப்பின் பலவீனத்தால் புத்துயிர் பெறும் பாதாளக் குழுக்கள்

## அரசு மீது விமல் பாய்ச்சல்

“அரசின் அரசியல் பழிவாங்கல்களால் பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்புப் படை அதிருப்தியடைந்துள்ளன. இதனால் தேசிய பாதுகாப்பு பலவீனமடைந்து வரும் அதேவேளை, பாதாள உலகக் குழுக்கள் மீண்டும் உயிர் பெற்று வருகின்றன.”

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணி அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“தற்போது நாட்டின் பல பகுதிகளிலும் தினந்தோறும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகிக்கொண்டிருக்கின்றன. மித்தெனிய பிரதேசத்தில் இரண்டு சிறுவர்கள் உள்ளிட்ட மூவர் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொழும்பு – புதுக்கடை நீதிமன்ற வளாகத்துக்குள்ளேயே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

தற்போது பாதாள உலகக் குழுவினர் உயிர் பெற்றுள்ளனர். நாளுக்கு நாள் சமூகத்தில் பாதுகாப்பற்ற தன்மை அதிகரித்து வருகின்றது. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் அடிப்படை காரணிகள் இன்றி இடமாற்றம் செய்யப்படுகின்றனர். இவ்வாறு ஒரே சந்தர்ப்பத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒருபோதும் இடமாற்றம் செய்யப்படவில்லை.

இதனால் பொலிஸாரும் அதிருப்திக்குள்ளாகியுள்ளனர். இதனால் தமக்குரிய பிரதேசத்தில் கடமையாற்றுவதற்கான அர்ப்பணிப்பு அவர்கள் மத்தியில் குறைவடையக் கூடும்.

இதேவேளை, மறுபுறத்தில் இராணுவம் மற்றும் புலனாய்வுப் பிரிவினரைப் பழிவாங்கும் படலங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



இவை அனைத்தின் ஊடாகவும் நாட்டின் பாதுகாப்பு பலவீனமடைந்து கொண்டிருக்கின்றது. தற்போது பழைய குற்றங்களுக்காகக் கடற்படையினரும் கைது செய்யப்படுகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளால் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்திய குழுவினர் பலவீனப்படுத்தப்படுகின்றனர். இவர்கள் பலவீனமடைவதால்தான் பாதாள உலகக் குழுவினர் தலைதூக்குகின்றனர்.

இவ்வாறான நிலைமையில் நாளுக்கு நாள் குற்றச் செயல்கள் அதிகரிக்குமே தவிர குறைவடையாது. அவற்றை நிறுத்தக் கூடிய இயலுமை இந்த அரசுக்கு இல்லை.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலகக் குழுவினரை ஒழிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசுக்கு அந்த வாக்குறுதியையும் நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.” – என்றார்.

# சுங்க பணிப்பாளரின் பெயரில் வட்ஸ்அப் ஊடாக பண மோசடி

சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் பெயர் மற்றும் பதவியை மோசடியாகப் பயன்படுத்தி பல்வேறு நபர்களிடமிருந்து வட்ஸ்அப் செய்திகள் ஊடாக பணம் வசூலிக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட மோசடி குறித்து இலங்கை சுங்கத்திற்குத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த வட்ஸ்அப் இலக்கத்தினூடாக, வங்கிக் கணக்கு இலக்கம் ஒன்று குறிப்பிடப்பட்டு பல்வேறு காரணங்களைக் கூறி பணம் கோரப்படுகின்றமை தெரியவந்துள்ளது.

இவ்வாறான மோசடியில் ஈடுபடும் நபர்களிடம் சிக்கி ஏமாற வேண்டாம் என இலங்கை சுங்கம் பொதுமக்களைக் கோரியுள்ளது.

இவ்வாறான மோசடியாளர்கள் பொதுமக்களை அணுகினால் அது தொடர்பில் அருகில் உள்ள காவல் நிலையத்திற்குத் தெரிவிக்குமாறு இலங்கை சுங்கம் அறிவுறுத்தியுள்ளது.

## இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய

# இந்திய மீனவர்கள் 10 பேர் இன்று அதிகாலை கைது!

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த 10 இந்திய மீனவர்கள் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி வந்து

மீன்பிடியில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்களே கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

10 இந்திய மீனவர்களும் மூன்று ட்ரோளர் படகுகளில் இழுவை மடியில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்டதோடு படகுகளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மன்னார் மற்றும் காங்கேசன்துறை கடற்படை தளங்களுக்கு அழைத்து வரப்பட்டனர்.

மேற்படி 10 இந்திய மீனவர்களும் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் ஊடாக நீதிமன்றங்களில் முற்படுத்தப்படவுள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேர்தல் ஆணையத்தின் சிக்கல்

உள்ளூராட்சித் தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் உயர் நீதிமன்றப் பரிந்துரைப்படி உரிய பெரும்பான்மையோடு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, சபாநாயகரினால் சான்றளிக்கப்பட்டு, சட்டமாகிவிட்டது.

இதனால், உள்ளூராட்சித் தேர்தலை அறிவித்து நடத்தும் சுயாதீனமான அதிகாரம் தேர்தல் ஆணையகத்துக்கு வந்துவிட்டது. தேர்தலை நடத்துவது தொடர்பான விடயத்தில் பந்து இப்போது தேர்தல் ஆணையத்தின் களத்துக்குள். அதை எப்படி விளையாடுவது என்று தெரியாமல் தேர்தல் ஆணையம் திக்கு முக்காடுவதும் வெளிப்படுகின்றது.

'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்' என்ற இக்கட்டில் தேர்தல் ஆணையம் மாட்டிக் கொண்டு விழி பிதுங்கி அல்லாடுகின்றது.

இப்போது, வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் தினசரி நடைபெற்று வருகிறது. மார்ச் 21 வரை அது நீடிக்கின்றது. தாங்கள் வரவு - செலவுத் திட்ட விவாதங்களில் முழுமூச்சோடு பங்குபற்றுகின்றமையால் - தங்களின் அந்த ஜனநாயகக் கடமைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் - அச்சமயத்தில் வேட்பு மனுத் தாக்கலுக்கான காலங்களை அறிவிக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒரே பிடியில் நிற்கின்றன. ஜனநாயக ரீதியில் அகோரிக்கையில் நியாயம் இருப்பதை மறுக்க முடியாது.

இது தொடர்பில் எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்றாகச் சென்று தேர்தல் ஆணையத்தைச் சந்தித்து தங்கள் கருத்தை நேரிலும் வலியுறுத்தி உள்ளன.

அதேசமயம் தேர்தலை உடனடியாகக் கிடைத்த வாய்ப்பில் நடத்துவதற்கான நடவடிக்கையை காலம் தாழ்த்தாது எடுக்கும்படி ஆளும் கட்சி தேர்தல் ஆணையத்தை வலியுறுத்துகின்றது. ஆளும் தரப்பின் பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று தேர்தல் ஆணையத்தை நேரில் சந்தித்து தங்களின் இந்தக் கருத்தையும் வலியுறுத்தி இருக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் உச்சம் பெற்ற ஆளும் தரப்பின் ஆதரவு - மக்கள் செல்வாக்கு - இப்போது சரியத் தொடங்கி இருப்பதாகக் கூறப்படுகின்றது. அது மோசமான கட்டத்தை அடைய முன்னர் தேர்தலை நடத்தி முடித்து விட வேண்டும் என்பதில் மிக முனைப்பாக இருக்கிறது ஆளும் தரப்பு.

மறுபக்கத்தில் எதிரணிக் கட்சிகள் ஆளும் தரப்பின் செல்வாக்கு இயன்றளவு வீழ்ச்சி அடைந்த சூழலில் தேர்தலை எதிர்கொள்ள விரும்புகின்றன. முடியுமான அளவு காலத்துக்குத் தேர்தலைத் தள்ளிப் போட்டால் அதுவரையில் - அதற்கிடையில் - ஆளும் தரப்பின் செல்வாக்கு கணிசமாகச் சரிந்து விடும் என்பது எதிரணியின் நம்பிக்கை.

இந்த இரண்டு தரப்புகளின் வலியுறுத்தல்களுக்கு நடுவில் எதைச் செய்வது என்று தெரியாமல் தடுமாறுகின்றது சுயாதீன தேர்தல் ஆணைக்குழு.

இரண்டு பக்கக் கருத்தையும் செவிமடுத்துள்ள தேர்தல் ஆணையம் இனி சுயாதீனமாக ஒரு முடிவை எடுக்க வேண்டும்.

தற்போது நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் படி, அடுத்த மூன்று மாத காலத்துக்குள் வேட்புமனுவை ஏற்பதற்கான ஒரு திகதியை தேர்தல் ஆணையம் அறிவிக்க வேண்டும். அத்திகதியில் இருந்து உரிய காலத்தில் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பையும் விடுக்க வேண்டும்.

இந்த ஒழுங்கின்படி, எதிர்க்கட்சிகள் வலியுறுத்துமாற் போல மார்ச் 21இல் வரவு - செலவுத் திட்ட விவாதம் முடிவுற்ற பின்னர், இத்தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்வதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் கொடுக்க முடியும்.

அப்படித் தாமதித்தால் இந்தத் தேர்தல் மே அல்லது ஜூன் மாதத்திற்குத் தள்ளிப் போய்விடும். அதை எதிர்க்கட்சிகள் வரவேற்கின்றன. ஆளும் கட்சி அப்படித் தள்ளிப் போடுவதை எதிர்க்கின்றது.

எந்தத் தரப்பு, எதனை வலியுறுத்தினாலும் சுயாதீனமாக - சுதந்திரமாக - இவ்விடயத்தில் முடிவெடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு உண்டு.

எதிர்க்கட்சிகள் தங்களுடைய நாடாளுமன்றக் கடமையை - ஜனநாயகப் பொறுப்பை - ஆற்றுவதற்கு இடம் அளிக்கும் விதத்தில் தேர்தலைப் பிற்போடும்படி - அதுவும் சுமார் ஒரு மாதம் பின் போடும் படி - கோருகின்ற போது, அதை நிராகரித்து, அவசரப்பட்டு தேர்தலை நடத்தும் முடிவை தேர்தல் ஆணையம் எடுப்பது, நியாயப்படுத்த முடியாத ஒரு முடிவாக வெளித்தோற்றும் என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

தேர்தல் ஆணையம் 'நீதியாக நடப்பது மாத்திரமல்ல, நீதியாக நடப்பது போல காட்டவும் வேண்டும்!'. அப்படி செய்வதாயின் அது ஆளும் தரப்பின் அழுத்தத்துக்கு இடம் கொடுக்காமல், சுயாதீனமாக முடிவெடுக்க வேண்டும்.

என்ன செய்யப் போகின்றது தேர்தல் ஆணையம்? அடுத்து வரும் தினங்களில் அல்லது வாரங்களில் அதன் போக்கு அம்பலமாகும்.





# முள்ளிவாய்க்கால் கடற்கரையை சுத்தப்படுத்தினர் இராணுவத்தினர்

(பா.சதீசன்)

முள்ளிவாய்க்கால் கடற்கரையில் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் இராணுவம், பொதுமக்கள் இணைந்து சுத்தப்படுத்தும் நடவடிக்கையில் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்தனர்.

6 ஆவது தேசிய பாதுகாப்பு படையணியின் இராணுவ கொமண்டர் மேஜர் கே.என்.சி.டீ.சில்வா தலைமையில் ஆறாவது தேசிய பாதுகாப்பு படையணியின் இராணுவத்தினர் , பொதுமக்களுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் கடற்கரை பகுதியில் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.
























# கட்டுப்பணத்தை திருப்பி வழங்குவதற்கு நடவடிக்கை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள கட்டுப்பணத்தை அந்தந்த வேட்பாளர்களுக்கும் கட்சிகளுக்கும் வழங்கும் நடவடிக்கையை இவ்வாரம் ஆரம்பிக்கவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

கடந்த செவ்வாய் கிழமை நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் ஆணைக் குழுவுக்கு கிடைக்குமென தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாவட்ட தேர்தல் அலுவலகங்களின் ஊடாக இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக 80,000 இற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியிருந்தனர்.

தேர்தலை 2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பிற்கமைய நத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

இதனிடையே 2023ஆம் ஆண்டு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக அச்சிடப்பட்ட வாக்காளர் அட்டைகளை அழிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# சட்டத்தரணிகள் சங்கத் தலைவராக ரஜீவ் அமரசூரிய தெரிவானார்





2025-2026 ஆம் ஆண்டிற்கான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 29 ஆவது தலைவராகச் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அவர் தனது போட்டியாளர் வேட்பாளர் சட்டத்தரணி சுனில் அபேரத்னவை விடப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளார்.

உத்தியோகப்பூர்வ முடிவுகளின்படி, ரஜீவ் அமரசூரிய 4,497 வாக்குகளைப் பெற்றார்.

அவருக்கு எதிராகப் போட்டியிட்ட வேட்பாளர் சுனில் அபேரத்ன 1,667 வாக்குகளைப் பெற்றார்.

ரஜீவ் அமரசூரிய 2,830 வாக்குகள் பெரும்பான்மையுடன் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

# டில்லியின் புதிய முதல்வராக ரேகா குப்தா அறிவிக்கப்பட்டார்



டில்லி பா.ஜ.க அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் டில்லியின் புதிய முதல்வராக ரேகா குப்தா அறிவிக்கப்பட்டார். அவர் இன்று பதவியேற்கிறார்.

டில்லியின் பா.ஜ.க. முதல்வரை முடிவு செய்ய, அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பா.ஜ.க. எம்.எல்.ஏக்கள் கூட்டம் நேற்று இரவு 7 மணிக்கு நடைபெற்றது. இதில் பா.ஜ.கவின் 48 எம்.எல்.ஏக்கள் பங்கேற்றனர். இதில் டில்லியின் அடுத்த முதல்வரை தேர்வு செய்வதற்கான மத்திய பார்வையாளர்களாக நியமிக்கப்பட்ட ரவிசங்கர் பிரசாத், ஓம் பிரகாஷ் தன்கர் ஆகியோரும் கலந்து கொண்டனர். டில்லி பா.ஜ.க. தலைவர் வீரேந்திர சச்தேவா அவர்களை வரவேற்றார்.

தொடர்ந்து டில்லியின் புதிய முதல்வராக ரேகா குப்தா அறிவிக்கப்பட்டார். பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் தற்போது பெண் முதல்வர்கள் எவருமே இல்லை. இதனால், எதிர்கட்சிகளின் மிகவும் முக்கியத் தலைவரான மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜிக்கு பதிலளிக்கும் வகையில் டில்லியின் முதல்வராக ஒரு பெண் அமரும் வாய்ப்புகளும் உள்ளன என தெரிவிக்கப்பட்டது . அது தற்போது உறுதியாகி உள்ளது.

டில்லியின் ராம்லீலா மைதானத்தில் இன்று மாலை 4.00 மணிக்கு துணைநிலை ஆளுநர் புதிய முதல்வர் ரேகா குப்தாவுக்கு பதவி ஏற்பு செய்து வைக்கிறார். இவருடன் புதிய அமைச்சர்களும் இதே மேடையில் பதவி ஏற்க உள்ளனர். இதில் பிரதமர் நரேந்திர மோடி, பா.ஜ.க. ஆளும் மாநில முதல்வர்கள், திரை நட்சத்திரங்களுடன் முக்கியத் துறவிகளும் கலந்து கொள்கின்றனர். இதற்கான ஏற்பாடுகள் பிரமாண்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. டில்லியின் 70 சட்டப்பேரவை தொகுதிகளில் பா.ஜ.க. 48, ஆம் ஆத்மி 22 இடங்களை பெற்றிருந்தன.

டில்லியின் அடுத்த முதல்வராக டெல்லி பா.ஜ.கவின் பல்வேறு முக்கிய தலைவர்களின் பெயர்கள் சொல்லப்பட்டன. இந்த நிலையில் ரேகா குப்தா முதல்வராக அறிவிக்கப்பட்டுள்ளார். 50 வயதான ரேகா குப்தா, அண்மையில் நடைபெற்ற டில்லி தேர்தலில் ஷாலிமார் பாக் சட்டமன்ற தொகுதியில் 29,595 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். மூன்று முறை கவுன்சிலராக பணியாற்றிய அனுபவம் கொண்டவர். தெற்கு டில்லி நகராட்சியின் மேயராகவும் பணியாற்றி உள்ளார். மாணவ பருவத்தில் அரசியலுக்குள் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# த.வெ.க. உடன் நாம் தமிழர் கட்சி கூட்டணி வைப்பது சரியாக வராது

## சீமான் தெரிவிப்பு



“ஆட்சியில் இருந்த பெரிய கட்சிகள் கூட்டணிக்கு அழைத்த போதே செல்லவில்லை. அப்படியிருக்கும்போது த.வெ.க – நாம் தமிழர் கூட்டணி சரியாக வராது,”

– இவ்வாறு மதுரையில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

மதுரையில் தென் மாவட்ட நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் கலந்தாய்வு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பங்கேற்றார்.

அப்போது செய்தியாளர்களிடம் சீமான் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழகத்தில் முதலில் இந்தி மொழியை திணித்தது காங்கிரஸ் கட்சிதான். அந்தக் கட்சியுடன் திமுக கூட்டணி அமைத்து தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது. திராவிட கட்சிகளின் ஆட்சியில் எந்த இடத்தில் இந்தி இல்லாமல் இருந்தது.

இந்தியாவில் அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழ்வது தான் சிறப்பு. இந்த நாட்டை பா.ஜ.க. துண்டாட துடிக்கிறது. இந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் மொழிவாரியாக மாநிலங்கள் எதற்காக பிரிக்கப்பட்டது? இந்தி மொழியை பயில்வதற்கு அந்த மொழிக்கு அப்படி என்ற சிறப்பு காரணம் உள்ளது. இந்திய மொழி இந்திதான் என எந்த அரசியல் சாசனததில் கூறப்பட்டுள்ளது? இந்தியா பல மொழி பேசும் மக்கள் ஒன்றிணைந்த ஐக்கியம். நாடு எங்கும் இந்தி மொழியை திணிப்பது தேவையற்றது.

இரண்டு மூன்று மாநிலங்களில் மட்டும் பேசக்கூடிய இந்தியை திணிக்க நினைப்பது தவறு. இந்தி மொழி தேவையெனில் கற்றுக் கொள்ளலாம். இந்தி மொழி விவகாரத்தில் திராவிடர்களை நம்பக் கூடாது. இந்தியை தி.மு.க. உளமார எதிர்க்கிறதா? இந்தி படித்தால் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு செல்லலாம் என்றால் வட மாநிலத்தில் இருந்து ஒன்றரை கோடி மக்கள் ஏன் தமிழகத்துக்கு வேலைக்காக வருகிறார்கள்.

நான் நோட்டுக்காக, சீட்டுக்காக அரசியலுக்கு வரவில்லை. நம் நாட்டுக்காக அரசியலுக்கு வந்துள்ளேன். தன்னை முன்நிறுத்தி கொள்பவர்கள் நாம் தமிழர் கட்சியில் இருந்து விலகி செல்கிறார்கள். நாம் தமிழர் கட்சியில் கட்சிக்காக நான், எனக்காக கட்சி என செயல்பட வேண்டும். சீமானுக்குப் பின் யார் தலைவர் எனும் போட்டியால் நாம் தமிழர் கட்சியில் இருந்து செல்கின்றனர். நேர்மையாக கட்சி நடத்த சர்வாதிகாரியாக செயல்படுவேன். நான் குட்டை, குளத்தில் வலை வீசவில்லை. தமிழ் தேசியம் எனும் பெருங்கடலில் வலை வீசுகிறேன்.

ஐ.பி.எஸ். அதிகாரி வருண் கட்சிக்காரர் போல் செயல்படுகிறார். அவர் என்னை தேவையில்லாமல் சீண்டினால் வெறிதான் வரும். வருண் வேலையே செல்போனை திருடுவது தான். வருண் மீது பொலிஸ் உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். திராவிடம் பேசாமல், பெரியாரை பேசாமல் நாம் தமிழர் கட்சி அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக வளர்ந்துள்ளது. ஆட்சி அதிகாரத்தில் இருந்த பெரிய பெரிய கட்சிகள் கூட்டணிக்கு அழைத்த போதே நான் செல்லவில்லை. எனவே, தமிழக வெற்றி கழகத்துடன் நாம் தமிழர் கட்சி கூட்டணி வைப்பது சரியாக வராது,” – என்றார்.



# உக்ரைன் குறித்து ஐரோப்பிய தலைவர்களுடன் கலந்துரையாட பிரான்ஸ் ஜனாதிபதி தீர்மானம்

பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரம், உக்ரைன் போர் குறித்து ஐரோப்பிய தலைவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் சுமார் 15 நாடுகள் பங்குகொள்ளவுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த கூட்டத்தில் உக்ரைனின் எதிர்கால திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

பிரித்தானியா, ஜேர்மனி, இத்தாலி, போலந்து, ஸ்பெயின், டென்மார்க் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளுடன் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னதாக கூட்டமொன்று இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹொங் கொங் மக்கள் தொகை 0.1 சதவீதத்தினால் அதிகரிப்பு



கடந்த ஆண்டு சீனாவின் ஹொங்கொங் மாநிலத்தில் 0.1 சதவீதத்தினால் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அங்கு மக்கள் தொகையானது 7.53 மில்லியனை கடந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

புதிதாக பிறந்துள்ள குழந்தைகள் மற்றும் அங்கு புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பின் காரணமாக மக்கள் தொகை அதிகரித்துள்ளது.

சீனாவின் ஹொங்கொங் மாநிலத்தில் 2023 ஆம் ஆண்டிறுதியில் 0.4 சதவீதமாக மக்கள் தொகை அதிகரித்தாக சீனாவின் புள்ளிவிபரத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹொங்கொங் மாநிலத்தில் மூன்றாவது ஆண்டாகவும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



# இஸ்ரேலிய, பாலஸ்தீன கைதிகளை ஒரே நேரத்தில் பரிமாற்றும் ஹமாஸ்

காஸா போர் நிறுத்த ஒப்பந்தத்தின் இரண்டாம் கட்டத்தின் போது, அனைத்து இஸ்ரேலிய கைதிகளையும் பாலஸ்தீன கைதிகளையும் ஒரே நேரத்தில் பரிமாற்றிக் கொள்வதற்கு ஹமாஸ் பரிந்துரைத்துள்ளது.

போர் நிறுத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதையும் இஸ்ரேலியர்களை முழுமையாக வெளியேற்றுவதையும் நோக்கமாகக் கொண்டு ஹமாஸ் இந்த பரிந்துரையை முன்வைத்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேநேரம், எதிர்வரும் சனிக்கிழமை விடுவிக்கப்படவுள்ள 6 பணயக் கைதிகளையும் விடுவிப்பதனை பாலஸ்தீன குழுவான ஹமாஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

இதனிடையே, காஸா போர் நிறுத்த ஒப்பந்தத்தின் இரண்டாம் கட்டம் இந்த வாரம் அமுலாகும் என இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்சர் கிடியோன் சார் தெரிவித்துள்ளார்.

# டாஸ்மேனியா கடற்கரையில் கரையொதுங்கிய திமிங்கிலங்கள்



அவுஸ்திரேலியாவின் டாஸ்மேனியாவில் உள்ள கடற்கரையில் 150 இற்கும் மேற்பட்ட திமிங்கிலங்கள் கரையொதுங்கியுள்ளன.

அவைகளில் சில திமிங்கிலங்கள் இறந்துவிட்டன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தற்போது 90 திமிங்கிலங்கள் மட்டுமே உயிருடன் உள்ளன என தெரிவிக்கப்படுகிறது.





# கஜேந்திரன், வேலன் சுவாமிகள் இருவரையும் இன்று வருமாறு பலாலி பொலிஸார் அழைப்பு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், தவத்திரு வேலன் சுவாமிகள் ஆகியோரை வாக்குமூலம் அளிக்க பலாலி பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றக்கோரி நடத்தப்பட்ட போராட்டம் தொடர்பாக வாக்குமூலம் சேகரிக்க பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பலாலி பொலிஸ் நிலையத்திற்கு இன்று நண்பகல் 12 மணிக்கு இருவரையும் ஆஜராகுமாறு பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



# திருக்கேதீஸ்வரம் சிவராத்திரி விழா குறித்து மன்னார் அரச அதிபர் தலைமையில் ஆராய்வு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு முன்னாயத்த கலந்துரையாடல் நேற்றுக் காலை திருக்கேதீஸ்வர ஆலய சம்பந்தர் மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையின் தலைவர் ராமகிருஷ்ணன் கலந்து கொண்டார்.

மேலும் பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள். அரச – தனியார் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகள், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்வரும் 26 ஆம் திகதி இடம்பெற உள்ள மகா சிவராத்திரி விழாவிற்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கடந்த வருடங்களை போன்று இம்முறையும் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்ள உள்ள நிலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக போக்குவரத்து ஒழுங்குகள், சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம், உணவு, பாதுகாப்பு, மருத்துவ வசதிகள் உள்ளடங்கலாக முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.







# வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் 'பாடசாலைக்கு மத்தியஸ்தம்' செயற்திட்டம்

(கி.வசந்தன்)

பாடசாலைக்கு மத்தியஸ்தம் என்ற தொனிப் பொருளில் மத்தியஸ்தர் சபை தொடர்பான விழிப்புணர்வு செயற்திட்டம் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

நீதி அமைச்சின் வழிகாட்டலில் சீடா நிறுவனத்தின் நிதி உதவியில் வவுனியா, மாவட்ட செயலகத்தின் மத்தியஸ்தர் சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.காண்டீபனின் ஏற்பாட்டில் கல்லூரியின் அதிபர் அருட் சகோதரி எஸ்.ஜே.சியாமினி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நீதி அமைச்சின் கீழ் உள்ள மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவினால் நாடு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் பாடசாலைக்கு மத்தியஸ்தம் என்ற தொனிப் பொருளில் மத்தியஸ்தர் சபை தொடர்பான விழிப்புணர்பு செயற்திட்டம் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வவுனியா, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மத்தியஸ்தம் தொடர்பான விழிப்புணர்வும் அது தொடர்பான செயற்பாடுகள் தொடர்பிலும் பயிற்சி அரங்கு முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா – மன்னார் மாவட்ட மத்தியஸ்தர் சபை பயிற்சியாளரும், இணைப்பு அதிகாரியுமான எஸ்.விமலராஜா, யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர்களான முகுந்தன், தர்சிகா, வவுனியா பிரதேச செயலக மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெசிந்தா ஆகியோர் வளவாளராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கி வைத்தனர்.

இப் பயிற்சியானது தொடர்ந்து மூன்று தினங்களுக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்த நாமும் ஒத்துழைப்பு வழங்குவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

இன்று நாட்டில் சட்டம், ஒழுங்குத் துறையில் பாரிய பிரச்சினை ஏற்பட்டு, கொலைகள் இடம்பெற்று வருகின்றன. சிறு பிள்ளைகள் கூட மரணிப்பதால் இதையும் விட பலமான – இறுக்கமான – தீர்வௌ அரசாங்கம் வழங்க வேண்டும். அதற்கு எதிர்கட்சி என்ற வகையில் நாமும் ஒத்துழைப்பு வழங்கத் தயார் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நீதிமன்றத்தினுள் கூட பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஒருவர் மரண பயத்துடன் நீதிமன்றத்திற்கு செல்வார் என்றால் அது பாரிய பிரச்சினை. அதனால் இது குறித்து அவதானத்தை செலுத்தி வலுவான தீர்மானங்களை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.




சமூகத்தில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறக்கூடாது. – எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சட்டம், ஒழுங்கைப் பலப்படுத்தும் அதிகாரமும் அரசுக்கு உள்ளதால், இவற்றை தடுத்து நிறுத்தி உடனடியாக இது தொடர்பாக விசேட அறிவிப்பினை வெளியிட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.



# சம்மாந்துறையில் அறுவடையான வயல்களுக்கு கூட்டமாகப் படையெடுக்கும் காட்டு யானைகள்

**(பாறுக் ஷிஹான்)**

வேளாண்மை அறுவடையின் பின்னர் யானை கூட்டம் புதிதாக முளைக்கின்ற புல் இனங்களை உண்பதற்காக நாடி வருகின்றன. அம்பாறை மாவட்டத்தில் திடீரென சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வளத்தாப்பிட்டி வில்லுக்குளப் பகுதிகளை ஊடறுத்து யானைகள் இவ்வாறு நேற்றுக் காலை முதல் மாலை வருகை தந்துள்ளன.

இந்த யானைகள் அங்குள்ள புதிய புல் இனங்களை உண்ணுவதுடன் கூட்டத்தில் உள்ள யானை குட்டிகள் விளையாடுகின்றமையையும் காண முடிந்தது. நேற்று பெரிய யானைகள் மற்றும் குட்டிகள் என சுமார் நூறுக்கும் அதிகமான யானைகள் அப்பகுதியில் உள்ள அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களை நோக்கி வருகை தந்திருந்தன.

தினமும் அப்பகுதிக்கு வரும் யானை கூட்டத்தை மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். இவ்வாறு வயல்வெளிகளை நோக்கி வருகை தந்துள்ள யானைகள் ஊருக்குள் பிரவேசிக்க முடியாத வகையில் பார்வையாளர்களாக உள்ள மக்கள் சத்தங்களை எழுப்பிய வண்ணம் உள்ளனர். மேலும்

அங்கு கொட்டப்படும் குப்பைகளையும் உண்ணுவதற்கு வருகை தரும் யானைகள் அருகில் உள்ள பொதுமக்களின் உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.





# வடக்கு மாகாண அபிவிருத்திக்கு நிதி எமக்குப் பிரச்சினை அல்ல!

## இளைஞர்களே தேவை என்கின்றார் ஆளுநர் வேதநாயகன்

(கி.வசந்தன்)

வட மாகாணத்தின் அபிவிருத்திக்கு நிதி பிரச்சினை இல்லை. அபிவிருத்தியை முன்கொண்டு செய்வதற்கான இளைஞர்களே தேவைப்படுகிறார்கள் என வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மன்னார், மடு, இரணை இலுப்பைக் குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைதரமுயர்த்திஉயர்தரவகுப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ந.கோபு தலைமையில் நேற்று இடம்பெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

மாணவர்களை உயர்த்த முடியும் என்கின்ற தூரநோக்கு இப்பாடசாலையின் அதிபரை போல் இருக்கும் பட்சத்தில் அதனை சாதிக்க முடியும். இன்று பல இடங்களில் நேரான தூரநோக்கு இல்லாமல் இருக்கிறது. இன்று பலரும் எதிர்மறையாக சிந்திப்பவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் எப்போதும் எங்களால் முடியாது, எங்களால் இதனை சாதிக்க இயலாது என்று கூறிக் கொண்டே இருக்கிறார்கள்.

மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயராமைக்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கின்றது. பல அலுவலர்களும் அவ்வாறான ஓர் எதிர்மறையான மனம் கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். எதையாவது செய்யக் கூறும் போது எமக்கு அது இல்லை, இது இல்லை என்று கூறுகின்ற ஒரு மனப்போக்கு அவர்களுக்கு காணப்படுகின்றது. அவர்கள் அவ்வாறு இருந்து பழகி விட்டார்கள். வேலைகளை செய்வதற்கு அவர்களுக்கு விருப்பமில்லை.



தற்போது நமக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. வட மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்த அரசாங்கம் விசேட நிதியை ஒதுக்கி இருக்கின்றது. அது உள்ளூர் வீதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

வவுனியா மாவட்டத்தைத் தவிர ஏனைய நான்கு மாவட்டங்களில் நான் அரசாங்க அதிபராக இருந்ததன் காரணமாக எனக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மூலை முடுக்குகள் அனைத்தும் நன்கு தெரியும். எனது அலுவலகங்களுக்கு தெரியாத பல விடயங்களை நான் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். குறிப்பாக இந்த இடத்திலே இன்ன விடயம் இருக்கிறது என்பதை கூட இடரீதியாக அவர்களுக்கு சொல்லி இருக்கிறேன். அந்த அளவிற்கு எனக்கு இந்த பிரதேசங்கள் மிகவும் தெரிந்தவை.

எங்களைப் பொறுத்த வரைக்கும் மிகவும் வறுமையில் உள்ள மக்களினுடைய வாழ்வாதாரம் மேம்பட வேண்டும் என்பதாகவே இருக்கின்றது. அதனை அடைவதற்கு நாங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

இந்தப் பாடசாலையினுடைய அதிபர் நேராகச் சிந்திக்கின்ற ஒருவராக இருக்கின்றார். அதேபோலவே இந்த பிரதேசத்தின் விவசாய போதனாசிரியர் ஒருவரை நான் சந்தித்தேன். அவர் மிகவும் துடிப்பான இளைஞனாக காணப்பட்டார். அவர் மிகவும் செயற்பாடு உள்ளவராக காணப்பட்டார். அவ்வாறான இளைஞர்களே அபிவிருத்தி செய்வதற்காக தேவைப்படுகிறார்கள். நிதி எங்களுக்கு பிரச்சினை இல்லை. ஆனால் எவ்வாறு செயல்படுத்த போகின்றோம் என்பதுதான் இங்கு இருக்கின்ற பிரச்சினை.

இதுவரை எங்களுக்குப் பல பிரச்சினைகள் இருந்தன. குறிப்பாக மக்களுடைய தேவைகள் நிறைவேற்றப் படவில்லை. மக்கள் அலுவலகங்களுக்கு சென்றால் அங்கு தங்களுடைய செயற்பாடுகளை செய்ய முடியவில்லை என்கின்ற பிரச்சினைகள் இருந்தன. மக்களுடைய தேவைகளை கூட அறிய முடியாமல் இருந்தது. அவை மாற்றப் படுகின்றன.

நாங்கள் நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களையே முன்னேற்ற வேண்டும். அரசாங்கம் கூட கிராமப்புற வீதிகளை புனரமைக்க வேண்டும் என கூறுகின்றது. – எனத் தெரிவித்தார்.

# வளமான நாட்டுக்கோ அழகான வாழ்க்கைக்கோ இந்த வரவு – செலவுத் திட்டத்தில் எதுவுமில்லை!

## புதிய மார்க்சிச லெனினிஸக் கட்சியின் சி.கா.செந்திவேல் விசனம்

“வளமான நாடு – அழகான வாழ்க்கை”" என்று கூறித்தான் இந்த அரசு அதிகாரத்துக்கு வந்தது. ஆனால் அந்த அரசு சமர்ப்பித்த வரவு – செலவுத் திட்டத்தில் வளமான நாட்டுக்கும் வழி செய்யப்படவில்லை, வளமான வாழ்வுக்கும் வழிகாட்டப்படவில்லை.

– இவ்வாறு தெரிவித்தார் புதிய மார்க்சிச லெனினிஸக் கட்சியின் பொது செயலாளர் சி.கா.செந்திவேல்.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திற்கும், இந்தியா முலீட்டாளர்களுக்கும் ஏற்ற வகையில் இந்த வரவு – செலவுத் திட்டம்




தயாரிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையிலும் அவர்கள் சொன்ன நிபந்தனைகளுக்கு ஏற்ற வகையிலும் இந்த வரவு – செலவுத் திட்டம் அமைக்கப் பட்டுள்ளது

இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் உண்மையான ஒரு வரவு செலவு திட்டத்தை இந்த அரசு சமர்ப்பிக்கவில்லை.

ஜனாதிபதி தேர்தலிலும் நாடாளுமன்ற தேர்தலிலும், மிக அலை அலையாக மக்கள் இந்த ஆட்சியாளர்களுக்கு வாக்களித்தார்கள்.

இதே தேசிய மக்கள் சக்தியினர் வீடு வீடாகச் சென்று நாங்கள் ஒரு வளமான நாட்டினை உருவாக்குவோம் என்று கூறி இருந்தார்கள்.

அழகான வாழ்க்கையை உங்களுக்கு தருவோம் என்று கூறியிருந்தார்கள்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் பலமான நாட்டினையும் காண முடியவில்லை, அழகான வாழ்க்கையையும் காண முடியவில்லை.



# இரணை இலுப்பைக்குளம் பாடசாலை நேற்று முதல் தரம் உயர்த்தப்பட்டது

## வட மாகாண ஆளுநரும் நிகழ்வில் பங்கேற்பு

(கி.வசந்தன்)

மடு, இரணை இலுப்பைக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தரம் 1சி பாடசாலையாக நேற்று உத்தியோக பூர்வமாகத் தரமுயர்த்தப்பட்டதுடன், உயர்தர வகுப்பும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதுவரை காலமும் சாதாரண தரம் வரை காணப்பட்ட இந்தல் பாடசாலையை தரமுயர்த்துமாறு இப் பிரதேச மக்கள், பாடசாலை சமூகத்தினர் கடும் முயற்சி மேற்கொண்ட நிலையில் பாடசாலை தரம் உயர்த்தப்பட்டது.

இது தொடர்பான நிகழ்வில் வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், மடு கல்வி வலய பணிப்பாளர், மடு பிரதேச செயலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.











# தமிழ் அரசு உடுப்பிட்டித் தொகுதியின் ஆலோசனைக் கூட்டம் நேற்று மாலை






இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உடுப்பிட்டித் தொகுதியின் உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் ஆலோசனைக் கூட்டம் மந்திகை மடத்தடியில் அமைந்துள்ள வடமராட்சி தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சின் பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றுள்ள எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

பொதுச்செயலாளர் பொறுப்பை ஏற்ற பின் முதலாவது கட்சியின் ஆலோசனைக் கூட்டம் என்பதனால் கட்சியின் கொடியை ஏற்றி வைத்த பின் கூட்டம் ஆரம்பமானது.

கட்சியின் ஆதரவாளர்களால் எம்.ஏ. சுமந்திரனுக்குப் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவம் வழங்கி வரவேற்றனர்.

# ‘ஐக்கிய மக்கள் காங்கிரஸ்’ புதிய கட்சி உருவாகின்றது

**(நூருல் ஹுதா உமர்)**

அரசியல் செயற்பாட்டாளரான முன்னாள் அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே தலைமையில் உருவாகியுள்ள "ஐக்கிய மக்கள் காங்கிரஸ்" என்ற கட்சியின் பொதுச்செயலாளராக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமான ஏ.சி. யஹ்யாகான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் காங்கிரஸ் கட்சியின் காரியாலயங்களில் ஒன்று சாய்ந்தமருதில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக அந்த கட்சியின் பொதுச்செயலாளர் யஹ்யாகான் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.



நாட்டிலுள்ள அநேகமான கட்சிகள் மீது மக்கள் வெறுப்புற்றுள்ளனர் எனவும் மக்களது நலனுக்காக மக்களது வாக்குகளைப் பெற்று எதிர்க்கட்சிகளில் இருக்கும் சில அரசியல்வாதிகள் அரசின் அனைத்து நடவடிக்கைகளையும் எதிர்க்கும் மனோ நிலையில் இருக்கின்றனர் எனவும், அவ்வாறான நிலை மாறி நாட்டையும் மக்களையும் பற்றி யோசிக்க கூடிய சிறந்தவர்கள் தங்களது கட்சியின் பக்கம் அணிதிரள்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சுசந்த புஞ்சிநிலமே, பிரதி அமைச்சராக இருந்த காலங்களில் இன, மத வேறுபாடின்றி அனைத்து மக்களதும் நாட்டினதும் நலனில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டார் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டுப்பற்றுள்ள அனைத்து மக்களும் இன,மத பேதமின்றி தங்களுடன் இணைந்து செயற்பட முன்வருமாறு கட்சியின் பொதுச்செயலாளர் ஏ.சி. யஹ்யாகான் அழைப்பு விடுத்துள்ளார்.



# கட்டாக்காலி நாய்களின் தொல்லை மஸ்கெலியா நகரப் பகுதியில் மோசம்

கட்டாக்காலி நாய்களின் தொல்லை மஸ்கெலியா நகரில் அதிகரித்து உள்ளது. இதனால் பாதசாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த சில மாதங்களாக மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் சாமி மலை, மஸ்கெலியா, நல்லதண்ணி ஆகிய நகரங்களில் கட்டாக்காலி நாய்கலின் தொல்லை அதிகரித்து உள்ளது.

.இது குறித்து சம்பந்தப்பட்ட மஸ்கெலியா பிரதேச சபை உடன் கனம் செலுத்தி கட்டாக்காலி நாய் தொல்லையில் இருந்து மக்களை காக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

# மன்னாரில் கனிய மணல் அகழ்வு ஆய்வு அறிக்கைக்காக வந்த அதிகாரிகள் குழு மீண்டும் திருப்பி அனுப்பி வைப்பு

## மக்களும், பொது அமைப்புக்களும் தொடர்ந்து கடும் எதிர்ப்பு



(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் கொன்னையன் குடியிருப்புப் பகுதியில் கடந்த இரண்டு தடவைகள் கனிய மணல் அகழ்வுக்கு மக்கள் எதிர்ப்பை தெரிவித்த நிலையில், நேற்றைய தினம் புதன்கிழமை மூன்றாவது தடவையாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் சுமார் 23 திணைக்களங்களங்களைச் சேர்ந்தோர் கனிய மணல் அகழ்வுக்கான சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கையை வழங்கக் கள விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்திருந்த போதும் இறுதியில் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்காத நிலையில் திருப்பி அனுப்பப்பட்டனர்.

மன்னார் தீவுப் பகுதியில் கனிய மணல் அகழ்வு முன்னெடுப்பதற்கான ஆய்வுப் பணிகள் கடந்த இரு தடவைகள் முன்னெடுக்க முயற்சிக்கப்பட்ட போதும், வருகை தந்த குழுவினர் மக்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்தச் சூழலில் மணல் அகழ்வுக்கான ஆய்வை ஆட்சேபித்துப் போராட்டத்தை முன்னெடுப்பவர்களுக்கு எதிராகக் கடந்த திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் நேற்றைய தினம் புதன்கிழமை காலை சுமார் 9.30 மணியளவில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் சுமார் 23 திணைக்களங்களைச் சேர்ந்தோர் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு கட்டம் கட்டமாக வருகை தந்தனர்.

இதன் போது மாவட்டச் செயலகப் பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப் படலாம் என்ற கருத்தில் பொலிஸார் அப்பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் சுமார் 23 திணைக்களங்களையும் சேர்ந்தோர் தோட்டவெளி கொன்னையன் குடியிருப்புப் பகுதிக்குச் சென்றனர்.

இதன் போது அப் பகுதியில் நூற்றுக்கணக்கான பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அந்தப் பகுதிக்கு கள விஜயத்தை அதிகாரிகள் மேற்கொண்ட போது அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்து பதாகைகளை ஏந்தியவாறு கோஷமிட்டனர்.

மக்களின் காணிகளின் ஊடாகவே தனியார் காணியில் கனிய மணல் பரிசோதனைக்கான கள விஜயத்தை அவர்க மேற்கொண்டிருந்தனர். இதன் போது மக்களும் தொடர்ந்தும் எதிர்ப்பை தெரிவித்தனர்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் செவ்வாய் மற்றும் நேற்று புதன் நாடாளுமன்றத்தில் இந்தக் கனிய மணல் பரிசோதனை மற்றும் அகழ்வு நடவடிக்கைக்கு எதிராக உரை நிகழ்த்திய நிலையில், அது குறித்த விடயம் தொடர்பாக உயர் மட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அதனையடுத்து நேற்றைய தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட இருந்த கனிய மணல் அகழ்வுக்கான பரிசோதனை கள விஜயம் இடை நிறுத்தப்பட்டு, வருகை தந்த அதிகாரிகள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதன் போது பொது அமைப்புகளின் தலைவர் வி.எஸ்.சிவகரன், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளர் மற்றும் கிராம மக்கள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், மீன்பிடி அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.









# பண்ணை ஆரோக்கிய சதுக்க யோகாவின் ஓராண்டு நிறைவையொட்டி 'ஆயுசு 100'!

## சிகரம் - படலை சுற்றுலா சேவைப் பிரிவு ஆரம்பித்தது





சிகரம் நிறுவனத்தின் படலை சுற்றுலா சேவைப் பிரிவு யாழ் பண்ணை ஆரோக்கிய சதுக்கம் பகுதியில் நடத்தி வந்த யோகாசன பயிற்சிகளின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு "ஆயுசு 100' பரிபூரண நலவாழ்வு மையம்" என்ற புதிய முயற்சி ஒன்று ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

யோகாசனம், தமிழர் பாரம்பரிய ஆரோக்கிய உணவுகள் என்பவற் றுடன், சித்த-ஆயர்வேத மருத்துவ வழிமுறைகளையும் உள்ளடக்கிய சேவைகளை உள்நாட்டு மக்களின் உடல்-உள-ஆன்ம மேம்படுத்துவ துடன், வெளிநாட்டு சுற்றுலா பயணி களையும் ஈர்க்கும் வகையில் இந்த மையத்தின் செயற்பாடுகள் அமையவி ருக்கின்றன என்ச் இந்த நிகழ்வில் அறியத்தரப்பட்டது.

கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் கொசி விடுதி உணவகத் தில் "ஆயுசு 100 - பரிபூரண நலவாழ்வு மையத்தின்" ஆரம்ப அறிமுக நிகழ்வு நடைபெற்றது.

சிகரம் நிறுவனத்தின் பணிப் பாளர் கோடீஸ்வரன் றுஷாங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யோகக்கலையில் தமிழ் நாடு அண்ணாமலை பல்கலைக் கழக பட்டமேற்படிப்பு மற்றும் தமிழ் நாடு விளையாட்டுப் பல்கலைக்கழக முதுமாணி பட்டம் பெற்றவரான, யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீட இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சூரியகுமார், தமிழ்நாட்டில் சிறுவர் யோகாசன பயிற்றுவிப்பாளர் பட்டம் பெற்ற சித்த மருத்துவர் ஜெ.ரத்னலகி, பண்ணை ஆரோக்கிய சதுக்கம் யோகக்கலை ஆசான் சித்த மருத்துவர் தி.இராகுலன், சக பயிற்றுவிப்பாளர் சித்த மருத்துவர் தர்சினி ஆகியோர், யோகாசனத்தின் மகத்துவம், நோயற்ற வாழ்வுதரும் அதன் பலம், நோய்தீர்க்கும் யோகா சனங்கள், சித்த-ஆயர்வேத மருத் துவ முறைமையில் மனித உடலை ஆரோக்கியமாக பேணும் வழிமுறை கள் என்பன தொடர்பாக நிகழ்வில் பங்கு கொண்டோருக்கு விளக்கமளித்தனர்.

நிகழ்வின் இறுதியில் பண்ணை ஆரோக்கிய சதுக்கம் யோகக்கலை பயிற்றுப்பாளர்களான, சித்த மருத்து வர்கள் இராகுலன், தர்சினி ஆகியோ ரின் நெறிப்படுத்தலில், ஆரோக்கிய சதுக்கம் யோகாசன பயிலுநர்களின் யோகாசன செய்கையும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், யாழ் பல்கலைக் கழக விஞ்ஞானபீட பேராசிரியர், யாழ் போதனா வைத்தியசாலை நோய்த் தடுப்புப்பிரிவுமருத்துவர்,யாழ்பல்கலைக் கழக முகாமைத்துவ பீட பிரதிப் பதிவா ளர், சித்த மருத்துவ பீட பிரதிப் பதிவா ளர், வடக்கு மாகாண சுற்றுலா சேவைப் பணியக முகாமைத்துவசபை உறுப்பி னர்கள், வடக்கு மாகாண சுற்றுலாத் துறை ஒன்றிய பிரதித் தலைவர், யாழ் முன்னணி உல்லாச விடுதிகளின் சிரேஷ்ட பணியாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின் தொடர்ச்சியாக, சிகரம் நிறுவனமும், ESAF Global Canada நிறுவனமும் இணைந்து எதிர்வரும் 22ம் திகதி மாலை 3.30 மணிக்கு, யாழ் பண்ணை பகுதியில் தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள், பாரம்பரிய உணவு வகைகள், யோகாச னம், சும்பா நடனம், கர்னாடக சங்கீதம், மெல்லிசை, பொப் இசைப் பாடல்கள் என்பன அடங்கிய ஒரு திறந்தவெளி கொண்டாட்டத்தை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இன்றைய ராசி பலன்கள் - 20.02.2025




பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச் சூழல் அவ்வளவு சிறப்பாக இருக்காது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து செல்ல வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.




இன்றுஉங்களுக்குஉற்சாகமானமகிழ்சிகரமான நாள். இன்றைய தினத்தை கொண்டாடி மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த திருப்தி அளிக்கும்.உங்கள் விருப்பங்களை திருப்திகரமாக நிறைவேற்றும் நாள்.

பணியில் அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள். இன்று கிடைக்கும் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்களின் கருத்துக்களை உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று திருப்திகரமாக இருக்கும். இன்று நீங்கள் பணம் சேமிப்பீர்கள்.உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களை வருத்திக்கொள்ளாமல் இருந்தால் இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய நாளை முன்கூட்டியே திட்டமிட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும். அதனால் சில பிரச்சினைகள் ஏற்படும். எனவே சிறிது கவனமுடன் இருக்க வேண்டும்.

இன்று சாதகமான பலன்களைப் பெற அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். இன்று சிறப்பான நாளாக அமையாது. இன்று பணிச்சுமை காணப்படும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இன்று பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று பணபுழக்கம் போதுமானதாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் அதிகமாக இருக்கும்.

முதுகு மற்றும் மூட்டுக்களில் விறைப்பு காணப்படும். உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. பலன்கள் தாமதமாகக் கிடைக்கும். அதிகம் எதிர்பார்க்காதீர்கள். பிரார்த்தனையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடுங்கள்.

உங்கள் மனதில் காணப்படும் பதட்டத்தை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் நலம். உங்களை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள் மதிப்பு மிக்க உடைமைகளை பத்திரமாக வையுங்கள். இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் பணத்தை இழக்க நேரலாம்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இன்று அவ்வளவு சிறப்பான நாளாக அமையாது. உங்கள் வளர்ச்சி குறித்துக் கவலைப்படுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

இன்று பணியில் உங்களிடம் பொறுமை காணப்படாது. இதனால் தவறுகள் நேரலாம். மனதை நிலைப்படுத்தி பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. நீங்கள் கடன் வாங்க நேரலாம். சிறந்த முறையில் பணத்தை நிர்வகிக்க முயலுங்கள்.

தொண்டை எரிச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. குளிர்ச்சியான நீரைப் பருக வேண்டாம்.




இன்று உங்களின் சொந்த முயற்சி மூலம் வளர்ச்சி காணப்படுகின்றது. வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் பதவி உயர்வுக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பு பாராட்டைப் பெறும். உங்கள் பணியின் தரத்தை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உங்கள் அன்பு அதிகரிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக காணப்படுகின்றது. இன்று பணத்தை சுதந்திரமாக கையாள்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று சுறுசுறுப்பான மன நிலையில் காணப்படுவீர்கள். மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். சுய வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள். உங்களிடம் மாற்றம் உணர்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இதற்கு உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கையே காரணம்.

உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகுவீர்கள். உங்கள் அனுசரனையான அணுகுமுறை அவரை மகிழ்விக்கும். உறவில் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




உங்களால் இன்று மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள முடியாது. வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மனதிற்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியில் வெற்றி காண மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். எனவே சுமுகமாக பணிகள் நடைபெற திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் குறைந்த நேரத்தை செலவு செய்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் பணத்தை இன்று முறையாக பயன்படுத்த இயலாது.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். சரியான நேரத்தில் உணவு உண்ண வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.02.2025




இன்று சிறிது சோம்பலுடன் காணப் படுவீர்கள். மனதில் குழப்பம் காணப் படும். இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

இன்று முழுவதும் பணியில் முழுகி யிருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

இன்று உங்கள் இருவரிடையே காணப்படும் மனக் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. எனவே குழப்பத்தை தவிர்த்து தெளிவான எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அஜாக் கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம்.

கண்களில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவன மாக இருக்க வேண்டும்.




இன்று சிறந்த அதிர்ஷ்டம் காணப் படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் அணுகுமுறை யில் வளைந்து கொடுக்கும் போக்கு காணப்படும்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் விருந்தில் கலந்து கொள்வீர்கள். அவர்களுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் காதல் உணர்வை வெளிப் படுத்துவீர்கள். இதனால் உங்கள் பிரியமானவரிடத்தில் அன்பு அதிகரிக்கும்.

இன்று பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. பங்கு வர்த்தகத்தின் மூலம் பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று அதிக ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப் படுவீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மகிழ்ச்சியான நாள். இன் றைய செயல்களின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும். கடினமான பணிகளையும் இன்று எளி தாகச் செய்வீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

மேலதிகாரிகளின் பாராட்டுகள் குவிந்து கொண்டே இருக்கும். பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே தரமாக முடித்துத் தருவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள். இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

எதிர்பாராத பண வரவுகள் காணப்படும். நீங்கள் ஆச்சரியப்படும் அளவில் உங்கள் வருமானம் அதி கரிக்கும். மகிழ்ச்சி நிலவும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் திடமாக காணப்படுவீர்கள்.




உங்களின் சொந்த முயற்சி மூலம் இன்று நீங்கள் அபாரமான வளர்ச்சி காண்பீர்கள்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்க லாம். இன்று அர்ப்பணிப்புடன் பணி புரிவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் அணுகுமுறை மூலம் அவரின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

நிதி நிலைமையில் முன்னேற்றம் கானப்படும். வங் கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள். திருப்தி நிலவும்.

சாதரணமான அணுகுமுறை மூலம் ஆற்றல் அதி கரிக்கும். அதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# ஸ்டாலின் – ஜீவன் சென்னையில் சந்திப்பு



(தலவாக்கலை பி.கேதீஸ்)

தமிழகம் சென்றிருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நேற்றைய தினம் தமிழ்நாடு தி.மு.க. தலைமை யகத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை மரியாதை நிமித் தம் சந்தித்தார். இருவரும் சுமுகமாக கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.